# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண். 196/2016

வா.சா.1– முதல் விசாரணை தொடர்ச்சி – நாள் 03–06–2024.

பெயர் = சித்ரா வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி வாதிகள் தரப்பில் முதல் விசாரணையின் தொடர்ச்சி.–

இந்த வழக்கில் நான் ஏற்கனவே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து முதல் நிலை சாட்சியம் அளித்துள்ளேன். ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. 21–06–2004 ம் தேதியில் வாதிக்கு ருக்மணி அம்மாள் எழுதிக்கொடுத்த பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் SRO நகல் **வா.சா.ஆ.–1** ஆகும். 21–10–2016 ம் தேதியிட்ட தாவா 1 வது லக்க சொத்திற்கு 30 ஆண்டுகளுக்குரிய வில்லங்கச் சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.–2** ஆகும். 25–1–2016 ம் தேதியில் நான் 3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய புகார் மனுவின் நகல் **வா.சா.ஆ.–3** ஆகும். மேற்படி புகார் மனுவிற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகள் 2 எண்ணிக்கை **வா.சா.ஆ.–4** ஆகும். 20–01–2016 ம் தேதியிட்ட வாதி ராஜ லெட்சுமி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது ஒன்று அசல் **வா.சா.ஆ.–5** ஆகும். 25–10–2016 ம் தேதியில் நான் 5 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் மனுவின் நகல் **வா.சா.ஆ.–6** ஆகும். 05–1–2016 ம் தேதியிட்ட வாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீது அசல் **வா.சா.ஆ.–7** ஆகும். வாதி 5 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய புகார் மனுவை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.–8** ஆகும். 23–10–2016 ம் தேதியில் வாதி ராஜலெட்சுமி இவ்வழக்கை நடத்துவதற்கு எனக்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத பவர் பத்திரம் அசல் **வா.சா.ஆ.–9** ஆகும். 03–10–2023 ம் தேதியில் 2 ம் வாதி சித்ராவிற்கு இவ்வழக்கை நடத்துவதற்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்படாத சிறப்பு பவர் பத்திரம் அசல் **வா.சா.ஆ.–10** ஆகும். 09–06–2003 ம் தேதியில் வாதியின் மாமியார் ருக்மணிஅம்மாள் தாவா 1 வது லக்க சொத்து உள்ளிட்ட மொத்த சொத்தை கிரையம் வாங்கிய கிரைய ஆவணத்தின் SRO நகல் **வா.சா.ஆ.–11** ஆகும். 22–02–2001 ம் தேதியில் பொன்னுத்தாய்

என்பவருக்கு சாரதாமணி எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணத்தின் SRO நகல் **வா.சா.ஆ.–12** ஆகும். 09–12–1998ம் தேதியில் சாரதாமணி என்பவருக்கு குல்லூர்சந்தை பலிஜகவர இளைஞர் முன்னேற்ற சங்கத்தின் தலைவர் எழுதிக்கொடுத்த பதிவு கிரைய ஆவணத்தின் SRO நகல் **வா.சா.ஆ.–13** ஆகும். 11–03–2022ம் தேதியில் சுந்தரமகாலிங்கத்திற்கு நல்லையன் வகையறா எழுதிக்கொடுத்த பதிவு தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் SRO இணையதள நகல் **வா.சா.ஆ.–14** ஆகும். 24–02–2023ம் தேதியில் யோகேஸ்வரனுக்கு சுந்தரராஜன் எழுதிக்கொடுத்த பதிவு தான செடடில்மெண்ட் பத்திரத்தின் SRO இணையதள நகல் **வா.சா.ஆ.–15** ஆகும். வழக்கறிஞர்/ஆணையர் தாக்கல் செய்த முதல் நிலை அறிக்கை **நீ.ம.சா.ஆ.–1** ஆகும். முதல்நிலை அறிக்கையுடன் வழக்கறிஞர்/ஆணையர்தாக்கல் செய்த வரைபடம் **நீ.ம.சா.ஆ.–2** ஆகும். வழக்கறிஞர்/ஆணையர் தாக்கல் செய்த இறுதி அறிக்கை **நீ.ம.சா.ஆ.–3** ஆகும். வழக்கறிஞர்/ஆணையர் இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்த வரைபடம் **நீ.ம.சா.ஆ.–4** ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க கு.வி. ஒத்தி வைக்கப்படுகிறது.